ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,126 தை மாதம்

# "தமிழர்கள் மறுசிந்தனே!"

## முதற் பாகம்



இந்துமதத்தின் தலைமை ஆச்சாறிய குருபீடம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

**43,73,126ஆம் ஆண்டின் தை மாத வெளியீடு.**

<u>தலைப்பு:</u> **"தமிழர்கள் மறுசிந்தனை - முதற் பாகம்"**

# <u>உள்ளுறை</u>

1. **"தமிழர்கள் மறுசிந்தனை"** - இந்துவேதம், இந்துமதம் பிழைக்க, தழைக்க, உழைக்க அழைக்கிறோம் என்று தமிழர்களுக்காக குருதேவர் எழுதிய நெடிய அஞ்சல் வடிவக் கட்டுரையின் முதல் பாகம்.
2. **"தமிழாசிரியர்களின் சிந்தனைக்கு"** - இன்றைய தமிழ்நாட்டின் தமிழாசிரியர்களின் சிந்தனைக்காக குருதேவர் தமிழ்மொழியின் நிலை இந்தியாவின் தமிழ்நாட்டில் இருப்பது பற்றி விளக்கி எழுதிய சிறிய கட்டுரை.
3. **"நமது போர் வியூகம்"** - நமது செயல்திட்டங்கள் என்னென்ன? நமது போர்முறை எது? இவை இரண்டையும் சுருக்கமாக விளக்கி குருதேவர் எழுதிய வாசகங்கள்.
4. **"வியூகம் என்ற சொல்லின் பொருள்"** - வியூகம் என்பது தமிழ்ச் சொல்லே. இதனை விளக்கிடும் வண்ணம் குருதேவர் வழங்கிய குறிப்புக்கள்.

# தமிழர்கள் மறுசிந்தனை

## இந்து வேதம்! இந்து மதம்!!

## பிழைக்க! தழைக்க!! உழைக்க!!!

## அழைக்கிறோம்! அழைக்கிறோம்!

## வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

அருளியவர்:

ஞானாச்சாரியார்

## இந்து இலக்கியக் கழக வெளியீடு

இந்துமதத் தலைமை ஆச்சாரிய மூலக் குருபீடம்

இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம்,

ஞானாச்சாரியார்,

பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி,

குருமகாசன்னிதானம்,

ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்

அருளும்

# செயல் விளக்கத் திருவோலை

## (முதற்பாகம்)

18-12-1991

**1.** அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. அம்மையப்பன் திருவருட் துணையே.

**2.** யாம், நான்கு யுகங்களாக இருந்து வரும் இந்து வேதமும், இந்து வேத மதமான இந்துமதமும் மறுமலர்ச்சி பெற, வளவளர்ச்சி பெறத் தோன்றியிருக்கும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி ஆவோம்.

**3.** அருளாட்சி நாயகமாகிய யாம் அனைத்தையும் விரிந்து விரைந்து செய்வதற்காக ஏற்கனவே இந்துமத அருட்பேரரசை அமைத்த 11வது பதினெண்சித்தர் பீடாதிபதியான எமது தாத்தா குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களிடமே மீண்டும் அருளாட்சி நாயகப் பொறுப்பை ஒப்படைத்து அவரின் கீழ் குருவாணை ஓலைநாயகமாக இருந்து அருளாட்சி அமைப்புப் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளோம். அதன் பயனாகவே, ரூ 1½ இலட்சம் செலவில் தஞ்சைத் திலகர் திடலில் 1991 செப்டம்பர் 28, 29 சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இந்துவேத மாநாடு இந்து மறுமலர்ச்சி இயக்க மாநாடாகவும், அருளாட்சி அமைப்புப் பணியை விரிவும் விரைவும் பெறச் செய்யும் விழாவாகவும் நடத்தப்பட்டது. இதில் பதினோரு பதினெண்சித்தர் பீடாதிபதிகளும், தாத்தா ஆதிசிவனாரும், மற்ற அருளுலகத்தவர்களும் வந்து கலந்து கொண்டார்கள்.

**4.** இந்துவேத மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்து அருளுலகத்தவர்களும், பொருளுலகத்தவர்களும் வகுத்தளித்த செயல்திட்டங்களையே பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதியாகிய யாம் குருவாணையாக வழங்கிச் செயல்படும் பொறுப்பினைப் பெற்றுள்ளோம். இதன்படியே, தமிழகம், தென்னிந்தியா, இந்தியா

என்று படிப்படியாக அருளாட்சி அமைப்புப் பணியை விரிவாக்க முற்பட்டுள்ளோம் பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, தலைவர், குருதேவர், ஞானாச்சாரியாராகிய யாம்.

## 5. <u>இந்துவேத மாநாட்டில் வகுத்தளிக்கப்பட்டுள்ள செயல்திட்டங்கள்:</u>

5.1. அருளாட்சி அமைப்புப் பணிக்கு அனைத்து விதமான அதிகாரங்களும், உரிமைகளும் பெற்றே முழுமுதல் தலைவராக பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

5.2. அருளாட்சி அமைப்புப் பணிக்காக இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும், அதன் கீழ் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்கள், சித்தர் கருவூறார் அருட்கோட்டங்கள், சித்தர் கருவூறார் வார வழிபாட்டு மன்றங்கள் எனும் முப்பெரும் அமைப்புக்களை தமிழகத்தின் எல்லாக் கிராமங்களிலும், சிற்றூர்களிலும், பேரூர்களிலும் துவக்கிச் செயல்படுத்துவதற்காக பாரதகால அசுவத்தாமனின் திருத்தோன்றல், ஆத்தாள் தேவி முப்பத்தாறு திருக்கரங்கள் கொண்டருளும் தேவி வெல்போர்க் கொற்றவை சன்னிதானம், சித்தரடியார் கு. இரவிமணி B.Sc., B.Tech., அவர்கள் ஓராண்டு காலத்திற்கு நேரடியாக இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஓராண்டு காலம் கழித்து இந்தப் பதவிக்கு இப்பொழுதிருந்து சேர்க்கப்படுகின்ற இந்து மறுமலர்ச்சி இயக்க உறுப்பினர்கள் மூலம் வாக்கெடுப்பு நடத்தப்படும் (தேர்தல் நடத்தப்படும்). அதில் இவரே கூட இப்பதவிக்குப் போட்டியிடலாம் அல்லது வேறு யார் வேண்டுமானாலும் போட்டியிடலாம்.

**<u>குறிப்பு:-</u>** இந்த உலகுக்கு வாக்கெடுப்பு முறையில் (தேர்தல் முறையில்) ஆட்சி நடத்தும் செயல்திட்டத்தை இந்துவேதம்தான் வழங்கியிருக்கிறது அல்லது பதினெண்சித்தர்கள்தான் வழங்கியிருக்கிறார்கள்.

5.3. ஏற்கனவே உள்ள பதினெண்சித்தர் மடத்தைச் சேர்ந்த அனைத்து வகைப்பட்ட நிறுவன நிர்வாகங்களுக்குமுரிய பதவியாளர்களும், உறுப்பினர்களும், ஆதரவாளர்களும், ஏந்தாளர்களும், ஆர்வலர்களும் **தங்கள் தங்களுடைய வட்டாரங்களில், இந்துவேத மாநாட்டு வெற்றி விழாவும், இந்து மறுமலர்ச்சி இயக்கப் பொதுச் செயலாளர் கு.இரவிமணிக்குப் பாராட்டு விழாவும் நடத்திடல் வேண்டும், நடத்திடல் வேண்டும், நடத்திடல் வேண்டும். இது அருளாணை பெற்ற குருவாணை.**

5.4 யார் அல்லது எந்த வட்டத்தார், வட்டாரத்தார் பதினெண்சித்தர் மடத்தின் கீழ் அருளாட்சி அமைப்புப் பணிக்காகச் செயல்பட விரும்பினாலும்; அவர்கள் உடனடியாக தலைவர், குருதேவர், ஞானாச்சாரியார், பதினெண்சித்தர் மடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூராருக்கு பொன்னேரியில் உள்ள பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை பதிவு அலுவலகத்திற்கும் (No. 3, N.G.O. நகர், பொன்னேரி-601204, செங்கற்பட்டு மாவட்டம்); தஞ்சையிலுள்ள அருட்சேனைத் தளபதி, இந்து மறுமலர்ச்சி இயக்கப் பொதுச் செயலாளர், சித்தரடியார் கு.இரவிமணி B.Sc., B.Tech., அவர்களுக்கும் (No.3, சிவாசி நகர், மேம்பாலம், தஞ்சை-613001); தலைமைப்பீடத்திற்கும் (13, குமாரசாமி தெரு, வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை-53); விரிவான விளக்கமான செயல்திட்டங்கள் அடங்கிய அஞ்சல்களை அனுப்பி மூவரின் ஒப்புதல்களையும், பரிந்துரைகளையும், அறிவுரைகளையும், செயல்திட்டங்களையும், வழிகாட்டல்களையும், வழித்துணைகளையும் பெற்றுத்தான் முறைப்படி செயல்பட வேண்டும்.

அத்துடன் இவர்கள் இருவரையும் வரவழைத்துத்தான் எந்த ஒரு நிறுவன நிர்வாகக் கட்டமைப்பையும், செயல்திட்டங்களையும் துவக்க வேண்டும், துவக்க வேண்டும், துவக்க வேண்டும். இதுதான் இந்துவேத மாநாட்டின் மூலம் அருளுலகத்தவர்கள் வழங்கியுள்ள மிகத் தெளிவான வரையறுக்கப்பட்ட செயல்திட்டம். அதாவது பதினெண்சித்தர் மடாதிபதியின் தலைமையையும், இந்து மறுமலர்ச்சி இயக்கப் பொதுச் செயலாளரின் வழிகாட்டலையும், வழித்துணையையும் முழுமையாக ஏற்றுச் செயல்படக் கூடிய தனிமனிதர்களும், நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களும்தான் அருளுலகத்தவர்களின் முழுமையான பாதுகாப்பையும், அருளுதவிகளையும் பெற்று அருளாட்சி அமைப்புப் பணியில் ஈடுபட்டவர்களாவார்கள்.

5.5. **உடனடியாக இ.ம.இ. பொதுச் செயலாளர் மூலம் ஆயுள் சந்தா ரூபாய் மூன்று (Rs. 3/-) மட்டும் (ஒருவரின் வாழ்நாளுக்கு ஒருமுறை ரூ. 3/- கட்டினால் போதும்.) செலுத்திச் சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றத்தில் உறுப்பினர் ஆகக் கூடியவர்களைச் சேர்க்க வேண்டும். இதுதான், பொதுமக்களின் அமைப்பு. இதில் சேருகிறவர்கள் எந்த இயக்கத்திலும், சங்கம், மன்றம், கட்சிகளிலும் இருக்கலாம். ஆனால், இந்துக்களாக, தமிழ்மொழிப் பற்றுள்ளவர்களாக, தமிழினப் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் நம்பிக்கையுள்ளவர்களாக, தமிழர்களின் உரிமைகளிலும், பெருமைகளிலும், வரலாறுகளிலும், இலக்கியங்களிலும், மரபுகளிலும் மெய்யான பிடிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.**

கணிசமான உறுப்பினர்கள் அதாவது குறைந்தது பதினெட்டுப் பேர்களாவது சேர்ந்த பிறகுதான் தேர்தல் வாக்கெடுப்பு முறையில் அந்தந்தச் சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றத்திற்கு 1) தலைவர், 2) இணைத்தலைவர், 3) துணைத்தலைவர், 4) செயலாளர், 5) இணைச்

செயலாளர், 6) துணைச் செயலாளர், 7) பொருளாளர், 8) இணைப் பொருளாளர் 9) துணைப் பொருளாளர் 10) அமைப்பாளர், 11) இணை அமைப்பாளர், 12) துணை அமைப்பாளர் எனும் பன்னிரண்டு பதவிகளுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 பேர்களை உடைய குழுதான் அந்தந்த சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றத்தை நிகழ்த்தும்.

அதற்கு பதினெண்சித்தர் மடாதிபதி, ஞானச்சாரியாரின் தலைமையையும்; இ.ம.இ.யின் பொதுச் செயலாளர் அருட்சேனைத் தளபதி இரவிமணியின் வழிகாட்டலையும், வழித்துணையையும் முழுமையாகப் பெற்றுச் செயல்பட வேண்டும். இப்படி முறையாகச் செயல்படும் சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றம்தான் பதினெண்சித்தர் மடத்தின் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றாகிடும்.

<u>**குறிப்பு:-**</u>

a) இந்தச் சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றம் என்ற இந்த அமைப்பு ஒரே தெருவில் இரண்டு மூன்றோ, ஒரே ஓர் ஊரின் ஒரே ஒரு வட்டத்துக்குள் இரண்டு மூன்று அமைப்புக்களோ அல்லது ஒரே ஓர் ஊருக்குள் இரண்டு மூன்று அமைப்புக்களோ அல்லது இரண்டு மூன்று அமைப்புக்களுக்கு மேற்பட்டு பல அமைப்புக்களோ கூட உருவாக்கப்படலாம். ஆனால், ஒவ்வோர் அமைப்பும் குறைந்தது பதினெட்டு உறுப்பினர்களையாவது கொண்டிருக்க வேண்டும். இதுவே சட்டம்.

b) ஓர் ஊருக்குள் எத்தனை கருவூரர் வார வழிபாட்டு மன்றம் அமைந்தாலும் அதற்கு 1,2,3, ... என்று எண் கொடுக்கப்படும்.

c) இந்த வார வழிபாட்டு மன்றம் அந்தந்த ஊரின் அல்லது அந்தந்த குறிப்பிட்ட வார வழிபாட்டு மன்றத்தின் உறுப்பினர்களின் வசதி வாய்ப்புக்களுக்கேற்ப வாரத்தின் ஏதேனும் ஒரு கிழமையில் காலை, மதியம், மாலை, இரவு என்ற நான்கு நேரங்களில் ஏதேனும் ஒரு நேரத்தில் குறைந்தது 2½ மணி நேரம் (ஒரு சாம நேரம்) நிகழ்த்தப்பட்டாக வேண்டும். இந்தக் கிழமையையும், நேரத்தையும் மாற்ற விரும்பினால் அதனை வார வழிபாட்டு மன்றத்தின் பெரும்பாலான உறுப்பினர்களின் கருத்தை தேர்தல் வாக்கெடுப்பு மூலம் முடிவு செய்துதான் மாற்ற வேண்டும். அப்படி மாற்றுகின்ற முடிவினை பொன்னேரியில் உள்ள தலைவருக்கும், தஞ்சையிலுள்ள செயலாளருக்கும், அம்பத்தூரிலுள்ள தலைமைப்பீட அலுவலகத்திற்கும் உடனே தெரிவித்து விட வேண்டும்.

d) இந்தக் கருவூரர் வார வழிபாட்டு மன்றத்தில்:-

அ) பதினெண்சித்தர் மடத்தின் பூசைவிதி நூலிலுள்ள பாடல்கள் பாடப்பட்டு கூட்டு வழிபாடு நிகழ்த்தப்பட வேண்டும்.

ஆ) யாரேனும் ஒருவர் அல்லது இருவர் சொற்பொழிவாளராக அழைக்கப்பட்டு இந்து வேதம், சித்தர்கள், தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு, இந்துமதம் ... முதலிய தலைப்புக்களில் சொற்பொழிவு ஆற்றும்படிக் கூறப்படல் வேண்டும்.

இ) புதியவர்கள் கட்டுரை, கவிதை அரங்கேற்ற விரும்பினால் அரங்கேற்றுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

ஈ) கூட்ட இறுதியில் பதினெண்சித்தர் மடத்துத் தலைவரிடத்திருந்தோ, பொதுச் செயலாளரிடத்திருந்தோ வந்துள்ள செய்திகளையோ, செயல்திட்டங்களையோ விளக்கிக் கூற வேண்டும்.

உ) புதிதாகச் சேர்ந்துள்ள உறுப்பினர்களை அந்தந்த வாரம் அனைவருக்கும் அறிமுகப்படுத்த வேண்டும். அப்படி அறிமுகப்-

படுத்தும் போதே புதியவர்களுக்கு ஏற்கனவே வார வழிபாட்டில் இருக்கக்கூடிய பழையவர்களையும் அறிமுகப்படுத்த வேண்டும். இப்படி வாராவாரம் பழையவர்களுக்கும், புதியவர்களுக்கும் இடையே ஏற்படுகின்ற அறிமுக நிகழ்ச்சியின் மூலம்தான் சித்தர் கருவூரர் வாரவழிபாட்டு மன்றம் நல்ல வளர்ச்சியைப் பெற முடியும்.

**6.** ஒரே ஊருக்குள் பல வார வழிபாட்டு மன்றங்கள் இருப்பின் அதாவது மூன்று வார வழிபாட்டு மன்றங்களுக்கு மேல் இருந்தால், ஒவ்வோர் ஊருக்கும் வார வழிபாட்டு மன்றங்களின் உறுப்பினர்களால் நேரடியாக ஒரு பொதுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார். மூன்று, மூன்றுக்கும் குறைவான வார வழிபாட்டு மன்றங்கள் இருந்தால் இவை அந்தந்த ஊரின் இந்து மறுமலர்ச்சி இயக்கத் தலைவரால் நிருவகிக்கப்படும்.

<u>குறிப்பு:-</u>

இன்னும் ஓராண்டு காலத்திற்கு ஒவ்வோர் ஊருக்கும் புதிய புதிய நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்காக பதினெண்சித்தர் மடத்திலிருந்து நேரடியாக பொது அமைப்பாளர் என்ற ஒருவர் நியமிக்கப்படுகிறார். இவரின் மூலம் இ.ம.இ., அ.வி.தி., சித்தர் கருவூரர் அருட்கோட்டம், சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றம் ஆகிய நான்கும் துவக்கப்படல் வேண்டும் என்பதே அருளாணை பெற்ற குருவாணை.

இந்தச் சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றம் ஏதேனும் ஒரு கோயில் வளாகத்தில் தோற்றுவிக்கப்படுவது அல்லது நிகழ்த்தப்படுவது சிறந்தது என்று பதினெண்சித்தர் மடம் பரிந்துரைக்கிறது.

**7. சித்தர் கருவூரர் அருட்கோட்டம்:**

7.1. சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றம் போல் ஒரே தெருவிலோ அல்லது ஒரே ஊருக்குள்ளோ எத்தனை அருட்கோட்டம் வேண்டுமானாலும் தோற்றுவித்துக் கொள்ளலாம்.

7.2. ஒவ்வோர் அருட்கோட்டத்திற்கும் குறைந்தது ஐந்து பேர் சன்னிதானப் பட்டம் பெற்றவர்களாவது இருக்க வேண்டும். அதாவது சித்தரடியான், சித்தரடியாள், சித்தரடியார் என்ற மூன்று வகையினரோ அல்லது ஏதாவது ஒரு வகையினரோ ஐவர் இருக்க வேண்டும்.

7.3. இந்த ஐவரும் கட்டாயமாக குருபீடத்திலிருந்து அ) மெய்ஞ்ஞானக்கொடி, ஆ) திரிசூலம், இ) மயில்பீலி, ஈ) கழுத்து, இரு கை, மணிக்கட்டு ஆகிய மூன்றுக்குமுரிய உருத்திராக்க மாலைகள், உ) குருதி வண்ணச் சிவப்பில் 4 முழ வேட்டி, 8 முழ இடுப்புக் கச்சு, 12 முழத் தலைப்பாகை ஆகிய ஐந்து வகையினையும் அருளேற்றப் பெற்று அடைந்திருக்க வேண்டும்.

7.4.

அ) அருட்கோட்டத்தில் பூசைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கவனித்து நிர்வாகம் செய்யும் பொறுப்பாளர் (அருட்கோட்டப் பொறுப்பாளர்) ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும். இவருடைய தலைமையின் கீழ்;

ஆ) பூசைமொழி வாசகங்களை ஓதுபவர்,

இ) யாகம் வளர்ப்பவர்,

ஈ) ஞானக்காட்சி மூலமோ அல்லது அருளுணர்வின் மூலமோ அருள்வாக்கு அல்லது அருட்கணிப்புக் கூறுபவர்,

உ) அனைவருக்கும் மந்திரிப்பதற்காக இடக் கையில் திரிசூலம், மெய்ஞ்ஞானக்கொடி ஏந்தி; வலக் கையில் மயில்பீலி வைத்து மந்திரித்து அருள் வழங்குபவர்,

ஊ) கட்டளைத் தம்பிரானுக ஒருவர் இருந்து முடிகயிறு, தாயத்து, சக்கரம், உருத்திராக்கம் முதலியவைகளை வழங்கி அவற்றின் வரவுசெலவு கணக்குகளை வைத்துக் கொள்ளுபவர்,

எ) திருக்குறிப்புத் தம்பிரான் என்பவர் ஒரு பெரிய பேரேட்டுப் புத்தகம் (Note book) வைத்துக் கொண்டு அருட்கோட்டத்திற்கு வரக் கூடியவர்களின் முழுமையான முகவரிகளையும், பாதிப்பு பரிகாரம் அவற்றின் பயன் முதலியவைகள் பற்றிய விவரங்களையும் உடனுக்குடன் தெளிவாகக் குறித்து வைக்க வேண்டும். இவரே அருட்கணிப்பு வேண்டுபவர்களின் பெயர், வயது, சாதகமிருந்தால் சாதகம், கைரேகை, குடும்பத்தார் விவரங்கள், குலதெய்வம், விருப்ப தெய்வம், வீட்டு மண், அவர் விரும்புகின்ற அல்லது கேட்கின்ற ஐய விஞக்கள், ... முதலியவற்றில் ஒன்றிரண்டு விவரங்கள் கிடைத்தால் கூட அவற்றையும், அருட்கோட்ட அருட்கணிப்பாளரின் பெயரையும் தலைமைப்பீட அருட்கணிப்புக் காணிக்கை வழக்கின் தன்மைக்கேற்ப ரூ. 25 முதல் ரூ. 108 வரை பெற்று அனுப்பும் பணியைச் செய்தல்; இவர் அனைத்து வகையான அஞ்சல் போக்குவரத்துக்களையும் கவனிக்க வேண்டும்.

**குறிப்பு-1**:-

எந்தப் பணமாஞலும் **பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை Pathinen Siddhar Madam Trust** என்று டிராப்டில் எழுதி பொன்னேரி State Bank என்றும் எழுதி அனுப்ப வேண்டும். கூடுமானவரை மணியார்டர் மூலம் தேவையில்லை. ஏனென்றால், நமது பதினெண்சித்தர் மடம் சட்டப்படி அரசாங்கப் பதிவு பெற்று இயங்குகின்ற ஒன்றாகும். **இப்படி ஒவ்வோர் அருட்கோட்டத்திற்கும் குறைந்தது ஏழு பேர்களாவது தங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொண்டு செய்திட்டால் நல்லது**. ஆஞல்,

ஓர் அருட்கோட்டம் துவக்குவதற்கு 5 சன்னிதானங்கள் இருந்தால் போதும். இந்த 5 பேர்களே 7 பேர்களின் வேலைகளைப் பகிர்ந்து கொண்டும் செய்யலாம். இந்த அருட்கோட்டங்கள் அனைத்தும் பதினெண்சித்தர் மடத்தாலும், இந்து மறுமலர்ச்சி இயக்கப் பொதுச் செயலாளராலும் நிர்வகிக்கப்படும்.

**குறிப்பு-2:-**

அருட்கோட்டத்திற்கு வருபவர்களையெல்லாம் கட்டாயமாக சித்தர் கருவூருர் வார வழிபாட்டு மன்றத்தில் உறுப்பினராகவும், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் குறைந்தது மூன்று மாதச் சந்தா ரூ. 7/-, ஆறு மாதச் சந்தா ரூ. 13/-, ஆண்டுச் சந்தா ரூ. 25/- இவற்றில் ஏதாவது ஒன்றைச் செலுத்தி உறுப்பினராகவும் சேர்க்க வேண்டும். அப்பொழுதுதான் அருளாட்சி அமைப்புப் பணி விரைவாகவும், விரிவாகவும் நிகழ்த்த முடியும் என்ற கருத்து அருளாணை பெற்ற குருவாணையாக சித்தர் கருவூருர் அருட்கோட்டத்திற்கு வழங்கப்படுகிறது.

## 8. சித்தர் கருவூருர் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையம்

8.1. இது இந்துமத மறுமலர்ச்சிக்காகவும், இந்துவேதம் பரப்பப் படுவதற்காகவும், இந்துமத இலக்கியங்கள், வாழ்வியல்கள் முதலியவைகளை விளக்குவதற்காகவும்; இந்துக்கள் என்று சொல்லப்படுபவர்கள் அனைவரும் அடிக்கடி ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட தலைமையின் கீழ் ஒன்றுகூடி இந்துமதம் பற்றிச் சிந்தனைகள் செய்யவும், கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடல்கள் நிகழ்த்தவும், பொது விழாக்கள் கொண்டாடவும், அமாவாசையில் இறந்தோருக்காக **'முன்னோர் வழிபாடும்'**, முழுநிலவு நாளில் கருவறைகள் இல்லாத கடவுள்கள் வழிபாடும் நிகழ்த்துவதற்காகவும் உருவாக்கப்படுகின்ற ஒன்றாகும்.

8.2. **இந்தக் கருவூரர் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையம் ஓர் ஊருக்கு ஒரே ஒரு அமைப்புத்தான் உண்டு.** இந்த அமைப்பில் ஏறத்தாழ ஓர் ஊரில் உள்ள எல்லாக் குடும்பத்தவர்களும் தங்கள் தங்கள் குடும்பத்தில் உள்ள பிறந்த குழந்தை முதல் அனைவரையும் உறுப்பினராகச் சேர்க்க வேண்டும். அதாவது ஓர் ஊரில் உள்ள பிறந்த குழந்தை முதல் பெரியவர் வரை தங்கள் சார்பாக ஒரே ஒரு ரூபாய் வாழ்நாள் முழுவதற்குமுரிய ஆயுள் சந்தாவாகக் கட்டினால் போதும், உறுப்பினராகி விடுவார்கள். இப்படி **ஒவ்வோர் ஊரிலும் உள்ள இந்துக்கள் அனைவரும்** இந்த அமைப்பில் உறுப்பினராகிட வேண்டும்.

8.3. இந்த சித்தர் கருவூரர் அருட்பணி விரிவாக்கத் திட்டத்தில் சேருகின்ற அனைவரும் இந்துக்களாக இருத்தல் வேண்டும். இதில் சாதி வேறுபாடு கிடையாது. நாத்திகர், ஆத்திகர், மதமறுப்பாளர், வெறுப்பாளர், எதிர்ப்பாளர், ... முதலிய எந்த வேறுபாடுகளும் கிடையாது. இந்துக்களாக இருக்கும் அனைவரும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

8.4. இந்த அமைப்புக்கும் பதினெண்சித்தர்களின் நிறுவன நிர்வாகக் கட்டமைப்புச் சட்டப்படி 12 பேர்கள் 12 பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டே அனைத்துச் செயல்களும், செயல்திட்டங்களும் நிறைவேற்றப்படும்.

8.5. **செயல்திட்டம்:**

8.5.1. பதினெண்சித்தர் மடத்திலிருந்து அருளாளர்களை வரவழைத்து ஊரில் உள்ள கோயில்களுக்குப் புத்துயிர்ப்புச் செய்தல், புதுக் கோயில்களுக்கு உயிர்ப்புச் செய்தல், நின்று போன திருவிழாக்களை நடத்துதல்;

8.5.2. பதினெண்சித்தர் மடத்திலிருந்து பேச்சாளர்களை வரவழைத்து இந்துவேத விளக்கக் கூட்டங்கள், இலக்கியக் கருத்தரங்குகள் முதலியவற்றை நிகழ்த்துதல்;

8.5.3. பதினெண்சித்தர் மடத்திலிருந்து அருட்கலை வல்லார்களை வரவழைத்து ஓகம், யோகம், ஞானம், தவம், பூசை, குண்டலினி, சேவலோன் உடற்பயிற்சிக் கலைகள், ... முதலியவைகளைப் பயிற்றுவிக்கக் கூடிய '**குறுகிய கால அருட்பயிற்சி முகாம்கள்**', '**நிலையான அருட்பயிற்சிப் பள்ளிகள்**' முதலியவைகளை உருவாக்குதல் அல்லது செயலாக்குதல்.

8.5.4. அந்தந்த ஊரிலுள்ள, ஊரின் சுற்றுவட்டாரத்திலுள்ள கோயில்களில் சிறப்புத் திருநாள்களில், திருவிழாக் காலங்களில் உழவாரப் பணி செய்து கோயில்களை தூய்மைப்படுத்தியும், அழகுபடுத்தியும் பாதுகாத்தல்;

8.5.5. மாதாமாதம் அமாவாசை நாளில் பகலில் இறந்தவர்களின் ஆவி, ஆன்மா, ஆருயிர் நற்பேறு பெறுவதற்காக '**முன்னோர் வழிபாடு**' என்பதை ஏதேனும் ஒரு பொது இடத்தில், கோயிலில், வெட்டவெளியில், தோப்பில், ஆற்றங்கரையில், ஏரிக்கரையில், கடற்கரையில் என்று ஏதேனும் ஓர் இடத்தில் நிகழ்த்தலாம். இந்த வழிபாடு பெரும்பாலும் காலையிலோ அல்லது மதியத்திலோ நிகழ்த்தப்படுவதுதான் மரபு.

இதேபோல், கருவறை, வெட்டவெளிக் கருவறை, வழிபாட்டு நிலையக் கருவறை, கோயில் மூலக் கருவறை எனும் நான்கு வகைப்பட்ட கருவறைகளில் எந்த ஒரு கருவறையிலும் நிலையாகத் தங்காமல் வாழக் கூடிய கடவுள்களுக்கும், கடவுள் நிலை பெற்றவர்களுக்கும் சேர்த்துக் கொண்டாடப்படும் '**பருவபூசை வழிபாடு**' என்ற கடவுள்கள் வழிபாடு முழுநிலவு நாட்களில் நிலவு தோன்றிய பிறகு அந்தந்த ஊராரின் வசதி வாய்ப்புப்படி மாலையில் துவங்கி இரவில் கொண்டாடப்படுவது.

இப்படி அமாவாசை நாளில் முன்னோர் வழிபாடும், முழுநிலவு நாளில் பருவபூசை வழிபாடும் கொண்டாடுவதின் மூலம் ஊரிலுள்ள எல்லாப் பொதுமக்களும் உலகியலுக்கு அப்பாற்பட்ட ஆவி, ஆன்மா, ஆருயிர் முதலியவைகளின் துணைகளையும், அனைத்து வகைப்பட்ட கடவுள்களின் துணைகளையும் பெற்று; அவற்றின் மூலம் எல்லாவகையான 'உளநலம்', 'உயிர் நலம்', 'உடல் நலம்' முதலியவைகளைப் பெற்று நல்வாழ்வு வாழ முடியும்.

**குறிப்பு-1:-** இந்தப் பருவபூசை விழா பெரும்பாலும் எல்லாவகைப்பட்ட கோயில்களிலும் கொண்டாடப்படுவதே மரபு. ஆனால், **பத்தி, சத்தி, சித்தி, முத்திகளைப் பெற விரும்புகின்ற** தனிமனிதரோ அல்லது கூட்டத்தாரோ தங்கள் தங்களுடைய வசதி வாய்ப்பு விருப்பங்களுக்கேற்ப எங்கு வேண்டுமானாலும் கொண்டாடலாம்.

குறிப்பு-2:- இந்த **முன்னோர் வழிபாடும், பருவபூசை வழிபாடும் மிகக் குறுகிய கால அளவில் மிகப் பெரிய பெரிய பயன்களைத் தர வேண்டுமென்றால் அந்தந்த ஊரில் உள்ள சுடுகாடு, புதைகாடு, அருளாளர்களின் சமாது முதலிய இடங்களில்தான் கொண்டாடப்பட வேண்டும் என்று இந்து வேதம் கூறுகிறது**. அதாவது, இந்துவேதத்தில் கல்லறைத் திருவிழாவும், கடவுளர் திருவிழாவும்; நீத்தார் நினைவுநாளும், முன்னோர் வழிபாடும்; 'இறந்தவர்களில் கடவுள்களாக ஆகாதவர்களின் (மாறாதவர்களின்) வழிபாடும், கடவுள்களாக ஆனவர்களின் (மாறியவர்களின்) வழிபாடும் ... என்ற தலைப்புக்களில் இந்து வேதத்தில் ஆங்காங்கே **'அமாவாசைப் பூசையும், முழுநிலவுப் பூசையும்'** பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

8.5.6. பதினெண்சித்தர் மடாதிபதியையோ அல்லது அவரது பதிலிகளையோ அல்லது அவரது வாரிசுகளையோ ஊராரின் வசதி வாய்ப்புப்படி ஆண்டுக்கு ஒருமுறையோ அல்லது இருமுறையோ தங்கள் தங்கள் ஊர்களுக்கு வரவழைத்துப் போதிய பொருளாதார வசதி வாய்ப்புக்கள் இல்லாத ஏழை எளிய பாட்டாளிப் பாமர மக்களும் அருளுலகப் பயிற்சிகளைச் செய்வதற்குரிய **குரு வழித் தீட்சை**யை அல்லது குருவருளைப் பெறுமாறு செய்தல்; முடிந்தால் குருவால் இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் வழங்கப் பெறுதல்; குருவின் அருளுரையைக் கேட்டல், குருவிடமிருந்து அருளூறு பூசனைப் பொருள்களைப் பெறுதல்; குருவை வணங்கி வாழ்த்துப் பெறுதல்; ... முதலியவை ஒவ்வொரு ஊரிலும் ஆண்டுக்கு ஒருமுறையாவது அல்லது சில ஆண்டுக்கு ஒருமுறையாவது நிகழுமாறு செய்தல், நிகழுமாறு செய்தல், நிகழுமாறு செய்தல்.

**9. பரிந்துரை:** இவ்வரிய செயல்திட்டங்களை எண்ணிப் பார்த்து நமது இயக்கத்தவர்கள், வாரவழிபாட்டினர், அருட்கோட்டத்தவர், ... முதலிய அனைவரும் மிகப்பெரிய பெரிய முயற்சிகளைத் தங்களால் இயன்றவரை செய்து அவரவர் வசதி வாய்ப்புக்களுக்கேற்ப எத்தனை ஊர்களில் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்களை உருவாக்க முடியுமோ அத்தனை ஊர்களில் உடனடியாக அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்களை உருவாக்கும் பணியில் ஈடுபட வேண்டும், ஈடுபட வேண்டும், ஈடுபட வேண்டும் என்பது **அருளாணை பெற்ற குருவாணை**யாகும். அதனால்தான், நம்மவர்கள் அனைவருமே அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்களை உருவாக்கும் அருட்பணி விரிவாக்கத் திட்ட மைய அமைப்புச் செயலாளராகச் செயல்பட வேண்டும் என்று அருளுலகத்தவர் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

அதாவது, **அருளுலகத்தவர்கள், இந்து வேத மதமான இந்துமதத்தின் நாற்றங்காலாக, தாய்வீடாக, கருவறையாக, காப்பகமாக இருக்கின்ற தமிழகத்துக்குள் இந்துவேதமும், இந்துவேதத்தின் செயல்வடிவான இந்துமதமும் விழிச்சி பெற்று எழிச்சியுற்று மிகப் பெரியபெரிய பயிற்சிகளைச் செய்து அரிய பெரிய முயற்சிகளை மேற்கொண்டு உயர்ச்சியினை எய்தி செழிச்சி அடைந்து செயல்பட ஆரம்பித்திட்டால்தான் இந்துமதம் யாண்டும் பரவியுள்ள குமரி முதல் இமயம் வரை விரிந்து கிடக்கும் இந்துமத இந்தியாவில் மாற்று மதங்களுக்கிடையில் ஒண்டி ஒதுங்கிப் பதுங்கிக் கிடக்கும் நிலையில் மாற்றம் ஏற்பட்டு இந்துமதம் ஆட்சி மீட்சி பெறும்! இந்துமதம் ஆட்சி மீட்சி பெறும்!! இந்துமதம் ஆட்சி மீட்சி பெறும்!!!**

**10.** அப்படி, இந்துமதம் தான் பிறந்து வளர்ந்து வாழ்ந்து ஆட்சி செய்து கொண்டிருந்த தொன்மைமிகு பழம்பெரும் இந்திய நாட்டுக்குள் மீண்டும் ஆட்சி மீட்சி பெற்றிட்டால்தான்;

இந்த இந்துமதத்திற்குரிய இந்துவேதம் எது?!
இந்த இந்துமதத்திற்குரிய இந்துவேதம் எங்கே?!
இந்த இந்துமதத்திற்குரிய இந்துவேதம் என்னவாயிற்று??,
இந்த இந்துமதத்திற்குரிய இந்துவேதம் எப்படி மறைந்தது? அல்லது எவரால் மறைக்கப்பட்டது?,
இந்த இந்துமதத்திற்குரிய இந்துவேதம் எவ்வாறு மறக்கப்பட்டது? அல்லது மறக்கடிக்கப்பட்டது?
இந்த இந்துமதத்திற்குரிய இந்துவேதம் எப்பொழுதிருந்து இல்லாமல் போயிற்று?!;
அப்படி இந்த இந்துமதத்திற்கு இந்துவேதம் இல்லாமல் போனதிலிருந்து இந்துமதம் என்னவாயிற்று?! அதனால், யார் யாருக்கு என்னென்ன இழப்புக்களும், ஈட்டங்களும் விளைந்தன!? விளைந்தன!? விளைந்தன!? ...

என்ற விளுக்களுக்கெல்லாம் இன்றுள்ள தன்னம்பிக்கையுள்ள மெய்யான இந்துமதப் பற்றுள்ள இந்துக்கள் மட்டுமின்றி இந்த உலகம் முழுவதுமுள்ள **'அருளுலக ஈடுபாட்டாளர்கள்', 'அருளுலக ஆராய்ச்சியாளர்கள்', 'அருளுலக ஆதரவாளர்கள்', 'அருளுலகப் பயிற்சி முயற்சிக் கலேஞர்கள்', 'வரலாற்றுத்துறை வல்லுநர்கள்', 'மனித சமுதாய இயல் அறிஞர்கள்', 'மானுட நல மேம்பாட்டுத் துறையைச் சேர்ந்த அறிவியல் மேதைகள்', 'உலக இலக்கியத் துறை வித்தகப் பேரறிஞர்கள்', 'உலக மத ஆராய்ச்சி வல்லுநர்கள்'**... முதலியோர் அனைவரும்;

- இந்துவேதம் எங்கே!? எங்கே!?!? எங்கே!?!?!?;
- இந்துவேதம் எப்படியிருக்கும்?! எப்படியிருக்கும்??!! எப்படியிருக்கும்???!!!;
- இந்துவேதம் எதையெதைப் பற்றி என்னென்ன சொல்லுகிறது?! எதையெதைப் பற்றி என்னென்ன சொல்லுகிறது??!! எதையெதைப் பற்றி என்னென்ன சொல்லுகிறது???!!!
- இந்துவேதம் குறிப்பிட்ட தமிழ்மொழிக்கு மட்டும் உரியதா?! தமிழினத்துக்கு மட்டும் உரியதா??!! தமிழ்நாட்டுக்கு மட்டும் உரியதா?! இந்தியாவின் எல்லேக்கு மட்டும் உட்பட்டதா?! ஆசியாக் கண்டம் வரை பயன்படக் கூடியதா?! கீழைய நாடுகளுக்கு மட்டும் பயன்படக் கூடியதா?! உலகம் முழுவதற்கும் பயன்படக் கூடியதா?! இன்றைய விஞ்ஞான வளர்ச்சிகள் மிகுந்த புதுமை உலகுக்குப் பயன்படக் கூடியதா?! என்றென்றும் நின்று நிலவி உலக மக்கள் எல்லோருக்கும் பயன்படக் கூடியதா?! ...

என்றெல்லாம் விளுக்களே எழுப்பி எழுப்பிச் சிந்தித்திடுவார்கள், விளுக்களே எழுப்பி எழுப்பிச் சிந்தித்திடுவார்கள், விளுக்களே எழுப்பி எழுப்பிச் சிந்தித்திடுவார்கள்.

அப்படிப் பலரும் சிந்திப்பதன் மூலம்தான் இந்து வேதத்தின் வளர்ச்சி அணைகட்டித் தேக்கி வைக்கப்பட்ட தண்ணீர் அணையை உடைத்துக் கொண்டு வெகுவேகமாகப் புறப்பட்டு எங்கும் பரவுவது போல் மிகமிக வேகமாக உலகெங்கும் பரவிடும், பரவிடும், பரவிடும். அப்படி இந்துவேதம் உலகம் முழுவதும் பரவினால்தான்; உலகம் முழுவதும் இன விடுதலை, மொழி விடுதலை, நாட்டு விடுதலை, ... முதலிய பல விடுதலைகள் பூத்துக் காய்த்துக் கனிந்து குலுங்கிடும். அப்படி விடுதலையுணர்வுகளும், விடுதலை வாழ்வுகளும் உலகெங்கும் பரவினால்தான் பதினெண்சித்தர்கள் இந்துவேதத்தின் மூலம் சாதிக்க விரும்புகின்ற உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் உருவாகிடும்.

அதற்காகத்தான், இந்துவேத மாநாட்டின் மூலம் அருளுலகத்தவர்கள் வழங்கியுள்ள செயல்திட்டங்களில் அல்லது அறிவித்திட்ட முடிவான தீர்மானங்களில்; "... உடனடியாகப் பதினெண்சித்தர் மடத்தைச் சேர்ந்த அனைவரும் தங்கள் தங்களால் இயன்ற மிகப்பெரிய முயற்சிகளைச் செய்து தமிழகத்தில் உள்ள குக்கிராமங்கள், கிராமங்கள், பட்டிதொட்டிகள், சிற்றூர்கள், ஊர்கள், பேரூர்கள், நகரங்கள், மாநகரங்கள், ... முதலிய அனைத்து இடங்களிலும் **'அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்களை'** உருவாக்க வேண்டும், உருவாக்க வேண்டும், உருவாக்க வேண்டும் என்ற அருளாணை வழங்கி, அதனை அருளாணை பெற்ற குருவாணையாக வழங்கும்படிச் செய்துள்ளார்கள்! செய்துள்ளார்கள்!! செய்துள்ளார்கள்!!!

*[முதல் பாகம் முற்றிற்று.]*

**//உண்மை நகல்//**

**மூல நகல்: சித்தரடியான் திரு இரா. சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.**

**//இதன் இரண்டாம் பாகம் அடுத்த இதழில் வெளிவரும்.//**

# தமிழாசிரியர்களின் சிந்தனைக்கு...

- ... இன்றைய தமிழின மொழிப் பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்குரிய உரிமையும், பெருமையும் பெருமளவில் உருக்குலைந்து; இருக்குமிடம் தெரியாமல் போய்விட்டது....
- ... தமிழ்மொழிக் கல்வியும், புலமையும், பட்டமும் ஆசிரியத் தொழில் ஒன்றிற்கு மட்டுமே உரியதென்ற மிகக் குறுகிய வாழ்வியல் மதிப்பீடு தமிழ்மொழிக்கு ஏற்பட்டு விட்டது.
- ... சமுதாய அரசியல்வாதிகள், தங்களுடைய எல்லையற்ற பணவெறி, பதவி வெறி, அதிகார வெறி, புகழ் வெறி, ... முதலியவைகளால் தமிழ்மொழிப் பற்று, தமிழ்மொழி உரிமையுணர்வு, தமிழ்மொழிப் பெருமித உணர்வு, தமிழிலக்கிய ஈடுபாட்டுணர்வு, தமிழிலக்கிய சிறப்புரிமை உணர்வு, தமிழிலக்கிய உயர்வுப் பெருமித உணர்வு, தமிழிலக்கியப் பற்றுணர்வு, தமிழின மொழி வரலாற்றுத் தொன்மைச் சிறப்பு உணர்வு, தமிழின மொழி வரலாற்று உயர்வுப் பெருமித உணர்வு, தமிழ் மொழியறிவு, தமிழ் இலக்கிய அறிவு, தமிழ்மொழியின் வரலாற்றறிவு, தமிழ்மொழியின் வரலாற்றறிவின் பெருமித உணர்வு, தமிழ்மொழியின் வரலாற்று அறிவால் விளைகின்ற தன்னம்பிக்கை உணர்வு, தன்மான உணர்வு, இனமான உணர்வு, இனப்பற்றுணர்வு, இன ஒற்றுமையுணர்வு, இன உரிமை உணர்வு, மொழி உரிமை உணர்வு, ... முதலிய உணர்வுகள் அனைத்தையும் மாற்றாரிடம் காணிக்கையாக்கியும்,

நன்கொடையாக்கியும், அன்பளிப்பாக்கியும், அடமானப் பொருள்களாக்கியும், விற்பனைச் சரக்குகளாக விலைக்கு விற்றும், ... பேரழிவையும், பேரிழிவையும் தேடித் தந்து விட்டனர்! தேடித் தந்து விட்டனர்!! தேடித் தந்து விட்டனர்!!!

- ... தமிழின மொழியுணர்வுகளின் அடிப்படையில் தமிழர்களால் ஏன் ஒன்றுதிரள முடியவில்லை? தமிழர்களை யாராலும் ஒற்றுமைப்படுத்த முடியவில்லை, ஏன்? தமிழர்களின் மொழியுணர்வையோ! இன உணர்வையோ! விழிச்சி பெறச் செய்வதோ! எழிச்சி பெறச் செய்வதோ! ... இயலாத ஒன்றாகி விட்டது. ஏன்? ஏன்?? ஏன்??? எப்படி? எப்படி?? எப்படி??? எதற்காக? எதற்காக?? எதற்காக???

... இவ்வாறெல்லாம் தமிழாசிரியர்கள் வினவெழுப்பிச் சிந்தித்தேயாக வேண்டும்! சிந்தித்தேயாக வேண்டும்!! சிந்தித்தேயாக வேண்டும்!!! அப்பொழுதுதான் மீண்டும் தமிழர்களை ஒன்றுதிரட்டிட; ஒற்றுமைப் படுத்திடத் தமிழ்மொழி பற்றிய சிந்தனைகளோ! செய்திகளோ! கருத்துக்களோ! அல்லது தமிழர்களைப் பற்றிய சிந்தனைகளோ! செய்திகளோ! கருத்துக்களோ! பயன்பட முடியாது! பயன்பட முடியாது!! பயன்பட முடியாது!!! பயன்பட முடியவே முடியாது என்ற பேருண்மை தெள்ளத் தெளிவாக விளங்கிடும்! விளங்கிடும்!! விளங்கிடும்!!!

அதாவது இந்த நூற்றாண்டின் சமுதாய வாதிகளும், அரசியல் வாதிகளும் தமிழ்மொழி பற்றிய சிந்தனைகளையும், செய்திகளையும், கருத்துக்களையும்; தமிழினம் பற்றிய சிந்தனைகளோடும், செய்திகளோடும், கருத்துக்களோடும் சேர்த்துப் பொதுமேடைகளிலும், உரையாடல்களிலும், எழுத்துக்களிலும் முழுமையாகப் பயன்படுத்தித் தமிழர்களை ஒன்றுதிரட்டி ஒற்றுமைப்படச் செய்து; அதன்மூலம் தங்கள் தங்களுடைய பேராசைகளையும், வெறிகளையும் தீர்த்துக் கொண்டு விட்டார்கள்.

அதனால், மக்களுக்கு இனிமேல் யார் தமிழ்மொழி பற்றியோ அல்லது தமிழர் பற்றியோ! பேசினாலும் சரி, எழுதினாலும் சரி, எந்தவித உணர்வும் ஏற்படாது! ஏற்படாது!! ஏற்படாது!!! ஏற்படவே ஏற்படாது! இதுதான் உண்மை! உண்மை!! உண்மை!!!

இந்தப் பேருண்மையை எந்த சமுதாயவாதியும் சரி! அரசியல்வாதியும் சரி! எண்ணிப் பார்க்கத் தயாராக இல்லை! தயாராக இல்லை!! தயாராக இல்லை!!! அதனால்தான், **தாய்மொழித் துறை, தமிழரின் சமுதாயத் துறை, தமிழரின் அரசியல் துறை, தமிழரின் மதத் துறை, ... முதலிய அனைத்துத் துறைகளிலும்; தூய்மையான வாய்மை நிறை தமிழுணர்வோ! அல்லது தமிழர்களோ! மக்கள் செல்வாக்குப் பெற்றுத் தலைமை தாங்கவில்லை! தலைமை தாங்கவில்லை!! தலைமை தாங்கவில்லை!!! என்பது மட்டுமல்ல; இனிமேல், நெடுங்காலத்துக்குத் தலைமை தாங்க முடியாது! தலைமை தாங்க முடியாது!! தலைமை தாங்க முடியாது!!! தலைமை தாங்கவே முடியாது!!! ... என்ற நிலை உறுதியாகி விட்டது! உறுதியாகி விட்டது!! உறுதியாகி விட்டது!!!**

இந்த நிலையிலும், நமது சமுதாயவாதிகளும், அரசியல்வாதிகளும் பழைய நினைவுகளிலும், கற்பனைகளிலும் மிதந்தவாறு தமிழ்மொழி பற்றியும், தமிழர் பற்றியும் பித்துப் பிடித்தவர் போல் பிதற்றித் திரிகிறார்கள். **இவர்கள் பின்னால் இவர்களால் நன்மையடைந்தவர்களும், சில ஏமாளிகளும்தான் திரிகிறார்களே தவிரப் பொதுமக்கள் இவர்களை வெறுக்கிறார்கள்! நம்ப மறுக்கிறார்கள்!** எனவே, பெரும்பாலான தமிழர்களே! **"தமிழர் அல்லதாரே நல்லார்"; "தமிழர் அல்லாதாரே தமிழரைக் காக்க வல்லார்"; "தமிழர் அல்லாதாரே தமிழருக்குத் தலைமை தாங்கத் தக்கார்"; "தமிழ் மொழியுணர்வு தமிழருக்கு வீழ்ச்சியையும், தாழ்ச்சியையும் தருகிறது!!!" ...** என்பன போன்ற

கருத்துக்களும், நோக்குகளும், உணர்வுப் போக்குகளுமே உடையவர்களாகி விட்டார்கள்.

அதாவது, தமிழர்களில் பெரியவர்களாக இருப்பவர்கள் **“தமிழ்! தமிழ்!! என்றும்; “தமிழர்! தமிழர்!!” என்றும் ... கூறியவர்கள் பகற் கொள்ளையடித்துக் கொண்டு ஒதுங்கிப் பதுங்கி விட்டார்கள். இனிமேல் தமிழின் பெயரைச் சொல்லிக் கொண்டோ! தமிழினத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டோ! ... எவர் வெளிவந்தாலும் நம்புவதற்கில்லை, நம்பிப் பயனில்லை, ...** என்று வாய்விட்டே பேசுகிறார்கள்.

தமிழர்களில் நடுத்தர வயதினராக இருப்பவர்களில்; பெரும்பாலானவர்கள் **“... தமிழ்! தமிழ்!! ... என்பதாலோ! அல்லது தமிழர்! தமிழர்!! ... என்பதாலோ எவ்விதப் பயனுமில்லை! இதுவரை தமிழர்கள்தான் தமிழ்நாட்டை ஆண்டார்கள்! என்ன செய்து விட்டார்கள்? தமிழினத் தலைவர்களே தமிழ்நாட்டையும், தமிழர்களையும், தமிழ்மொழியையும் காட்டிக் கொடுத்தார்கள், சுரண்டினார்கள், ஏமாற்றினார்கள், உரிமையிழக்கச் செய்தார்கள். ... ஆனால், தலைவர்களாக வந்தவர்கள் எல்லோருமே கோடி கோடியாகச் சேர்த்துக் கொண்டார்கள். இதில் தமிழென்ன? தமிழர் என்ன?? ... எல்லாமே ஏமாற்று! உண்மையான தமிழ்மொழிப் பற்றும், தமிழினப் பற்றும் உடையவர்களே எங்குமில்லை! எங்குமில்லை!! எங்குமில்லை!!! ... எவருக்குமே உண்மையான தமிழ்மொழிப் பற்றோ! அல்லது தமிழினப் பற்றோ! இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை!!!!....”** என்று வாய்விட்டுப் பேசுகிறார்கள்.

தமிழின மாணவ மாணவியர்கள் எல்லோருமே! **“இன்றைக்குப் படித்தவுடன் வேலை கிடைக்க வேண்டுமென்றால்; தமிழைத் தவிர, வேறு ஏதாவது ஒருமொழி நன்கு தெரிந்தால்தான் முடியும்... அல்லது தமிழ்மொழியே படிக்காமல் வேறு எந்த ஒரு மொழி**

**படித்தாலும் சரி, பிழைத்துக் கொள்ளலாம்! பிழைத்துக் கொள்ளமுடியும்! ஆனால், நம் தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டால், வாழ்நாள் முழுவதும் வேலை தேடித் தேடி அலையத்தான் நேரிடும்; அல்லது படித்த படிப்புக்குச் சம்பந்தமே இல்லாத ஏதாவது ஒரு வேலையைத்தான் தற்காலிகமாகப் பெற வேண்டியிருக்கும்! பெற முடியும்! இல்லாவிட்டால், தமிழ் படித்த பாவத்திற்காக, தமிழ் படித்த தவறுக்காக ... வேலையோ வேலை! என்று பிச்சை கேட்பது போல் தெருத் தெருவாக, ஊர் ஊராக அலைந்து திரிய வேண்டியதுதான்! ... அலைந்து திரிய வேண்டியதுதான்! ... அலைந்து திரிய வேண்டியதுதான்! எனவே, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழைப் படிக்காமல் இருக்கும்படியாகப் பாடத் திட்டங்களிலிருந்தே தமிழை எடுத்து விட வேண்டும்! பாடத்திட்டங்களிலிருந்தே தமிழை எடுத்து விட வேண்டும்! பாடத் திட்டங்களிலிருந்தே தமிழை எடுத்து விட வேண்டும்!”** என்று வாய்விட்டே பேசுகிறார்கள்.

இப்படிப்பட்ட கருத்தோட்ட நோக்குகளும், உணர்வுப் போக்குகளும் அதிகமாகிக் கொண்டே போகின்ற காலக்கட்டத்தில்தான்; தமிழாசிரியர்களும் மனம் தளர்ந்த நிலையிலும், சிந்தை வெந்த நொந்த நிலையிலும், உணர்வு சோர்ந்த நிலையிலும், ... தமிழ்மொழிப் பற்றோ! தமிழ் இலக்கிய ஆர்வமோ! தமிழின பாசத் துடிப்போ! ... இல்லாமல் ஏனோதானோவென்று கடமைக்காகத் தேர்வுக் கண்ணோட்டத்தில் மட்டுமே தமிழ்ப் பாடங்களை நடத்துகின்ற நிலைக்கே பெரும்பாலும் வந்து விடுகின்றனர், அல்லது வந்து விட்டனர் ...!!! ...???

இப்படித் தமிழாசிரியர் பெரும்பாலும் தளர்ச்சியும், வெந்து நொந்த நிலையும், சோர்ந்த நிலையும் ... அடைய நேரிட்டு விட்ட காரணத்தால்! .... காரணத்தால்!! ... காரணத்தால்!!! ... தமிழ்மொழியின் வருங்காலமும்,

தமிழர்களின் வருங்காலமும் ... ஆழ்ந்த அடர் காரிருளின் கும்மிருட்டு நிறைந்ததாகவே காட்சி அளிக்கின்றன.

இந்த கும்மிருட்டை, காரிருளை விரட்டி யோட்டும் வல்லமை அரசியல்வாதிகளிடமோ! சமுதாயவாதிகளிடமோ! இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை! ஆனால், வட இமயம் முதல் தென்கோடிக் கடல்பரப்பு வரை விரிந்து கிடக்கும் இந்தியத் துணைக் கண்டத்துக்கு 'இந்தியா' என்ற பெயரையும், இத்துணைக் கண்ட மக்களின் வாழ்க்கைக்கு 'இந்து வேதம்' என்ற வேதத்தையும், வாழ்வியல் மதிப்பீடு அனைத்துக்கும் 'இந்துமதம்' என்ற மதத்தையும் வழங்கியுள்ள "அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிக்கு" ஆசிரியர்களாக இருக்கின்ற தமிழாசிரியர்களால்தான் இந்தியாவின் மூலமொழியான தமிழ்மொழியையும், இந்தியாவின் பூர்வீகக் குடிகளான தமிழர்களையும் காப்பாற்ற முடியும்! காப்பாற்ற முடியும்!! காப்பாற்ற முடியும்!!!

எப்போது நாடு முழுவதும் தமிழ்மொழிக்குப் பெருமையும், உரிமையும், தமிழர்களுக்குள் ஒற்றுமையும், பற்றும், மொழியுணர்வும், இன உணர்வும், தன்மான உணர்வும், தன்னம்பிக்கையும் ஏற்படுமாறு செய்யும் பொறுப்பைத் தமிழாசிரியர்கள் ஏற்கிறார்களோ! அப்போதுதான், உண்மையிலேயே தமிழ்மொழியையும், தமிழர்களையும் சார்ந்து கவிழ்ந்துள்ள காரிருளும், கும்மிருட்டும் அகலலாம்! அல்லது அகற்றப் படலாம்! என்ற நம்பிக்கை நல்லோர்க்குள் எல்லோர்க்கும் ஏற்பட முடியும்.

நம் தமிழாசிரியர்கள் மிகுந்த தன்னம்பிக்கையோடும், வற்றாத பேரார்வத்துடனும் செயல்பட்டுத் தங்களால் உருவாக்கப்படும் மாணவர்கள் அனைவருமே தமிழ்மொழி உணர்வும், தமிழின உணர்வும் ஆற்றுப் பெருக்காய் ஊற்றெடுக்கத் தம் முன்னோர்களான

பதினெண்சித்தர்கள் அருளியுள்ள மூலவேதமும், முதல் வேதமும், பொதுவேதமுமான இந்துவேதத்தின் அடிப்படையிலும், இந்துமதத்தின் நடைமுறை மூலமும்; தமிழ்மொழியையும், தமிழகத்தையும் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபடும்படிச் செய்திடல் வேண்டும்.

அதாவது நம் தமிழாசிரியர்களால் உருவாக்கப்படும் ஒவ்வொரு மாணவரும் தமிழ்மொழி உணர்வும், தமிழின உணர்வும், விழிச்சியும், எழுச்சியும், மலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிமீட்சியும், உயர்ச்சிநிறை செழிச்சியும் அடையும்படிச் செய்வதற்கான முயற்சியில் எப்போது ஈடுபடுகிறுர்களோ! அப்போதுதான் தமிழ்மொழிக்கும், தமிழர்க்கும் வருங்காலம் உண்டு.

அதாவது நம் தமிழாசிரியர்களால் தயாரிக்கப்படும் மாணவர்களில் யாரும் தமிழ் உணர்வையோ, தமிழின உணர்வையோ சூனியமாகக் கருதுபவர்களாகவோ! அல்லது இந்த உணர்வுகளிலிருந்து மாறுபட்டவர்களாகவோ! முரண்பட்டவர்களாகவோ!! வேறுபட்டவர்களாகவோ!!! ஈடுபாடு அற்றவர்களாகவோ!!!! உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் தமிழாசிரியர்களின் பொறுப்பு! கடமை!

இப்படிக் கூறுவதற்குக் காரணம்; இத் திருநாட்டைப் பொறுத்த வரையில் சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கியத் துறைகள் அனைத்திலுமே தலைவர்களாக செயல்படுபவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழாசிரியர்களால் உருவாக்கப்படுகிறவர்களே ஆவார்கள். எனவே, தமிழாசிரியர்களுக்குரிய அரிய, பெரிய, சீரிய, உயரிய, நேரிய, வீரியக் கடமை நிலையைத் தமிழாசிரியர்கள் உணர்ந்து செயல்பட முன்வர வேண்டும்.

இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் மாணவர்களுக்கிடையில் தமிழ்மொழி உணர்வும், தமிழின உணர்வும், தமிழ்ப் பண்பாட்டுப் பற்றுணர்வும், தமிழிலக்கிய அறிவும்... சரிவர வளர்க்கப் படாத காரணத்தினால்தான்; நம் திருநாடும், வீடும், ஏடும் கேடுற்று, தடுமாற்றங்கள் பெற்று, நடுக்குற்று, அவலக் கேவலங்களைப் பெற்று அவமானப்பட்டு, அடிமை நிலையையும், மிடிமை நிலையையும் அடைந்து அல்லல் படுகிறது! அல்லல் படுகிறது!! அல்லல் படுகிறது!!! அனாதையாகத் தலைமையிழந்து நாதியற்றுக் கிடக்கின்றது! அனாதையாகத் தலைமையிழந்து நாதியற்றுக் கிடக்கின்றது!! அனாதையாகத் தலைமையிழந்து நாதியற்றுக் கிடக்கின்றது!!!

ஒருவரை மற்றவரோடும், ஒரு சமூகத்தை மற்ற சமூகத்தோடும், சமய சமுதாய அரசியல் கலை இலக்கிய நிறுவன நிர்வாகங்களில் ஒன்றை மற்றவற்றோடும் இணைத்துப் பிணைத்து ஒன்றுதிரட்டி, ஒற்றுமைப் படுத்தும் வல்லமை தமிழ் உணர்வுக்கும், தமிழின உணர்வுக்கும், தமிழ்ப் பண்பாட்டுப் பற்றுணர்வுக்கும், தமிழறிவுக்கும்தான் உண்டு! உண்டு!! உண்டு!!! ... இப்பேருண்மையினை முறையாகவும், நிறைவாகவும் உணர்ந்து செயல்படுத்த முன்வர வேண்டும், தமிழாசிரியப் பெருமக்கள்.

எனவே! எனவே!! எனவே!!! நம் தமிழாசிரியப் பெருமக்கள், மாணவர்களுக்கிடையிலும், பொதுமக்களுக்கிடையிலும் மீண்டும் தமிழ்மொழி உணர்வும், தமிழின உணர்வும், தமிழ்ப் பண்பாட்டுப் பற்றுணர்வும், தமிழறிவும் மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், வலிமைச் செழிச்சியும், ஆட்சிமீட்சியும், ... அடையுமாறு செய்ய ஆயத்தமாக வேண்டும்! ஆயத்தமாக வேண்டும்!! ஆயத்தமாக வேண்டும்!!! ... ... ... ... ... ... ...

**அழைக்கிறார்! அழைக்கிறார்!! அழைக்கிறார்!!!**

**அந்தணர் அண்ணல்**

**ஞானச்சாரியார்,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**இந்துமதத் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர்,**
**இந்துவேத நாயகம்.**

தொடர்பு:
குருதேவர், ஞானச்சாரியார்,
இ.மு.க., இ.ம.இ.,
எண் 13, குமாரசாமி தெரு, வரதராசபுரம்
அம்பத்தூர், சென்னை-600053
தொலைபேசி: 654447

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: தட்டச்சு நகலாக இருந்தது.//**

# நமது போர் வியூகம்

அன்பு மகனே! தமிழ்மொழிதான் நமது அருட்போருக்கும், அருளாட்சிக்கும் உரிய அடிப்படைச் சாதனம், உயிர் மூச்சு, குருதி ஓட்டம். இதைப் புரிந்து கொள்.

♦ சமய, சமுதாய அரசியல், கலைத்துறைகளில் கணிசமான அளவு வழக்கில் இல்லாமல் இருக்கும் சில ஆயிரம் தமிழ்ச் சொற்கள் உரிய பொருள் விளக்கங்களோடு விரைவில் அச்சிடப்பட்டே ஆக வேண்டும்.

♦ நான்கு வேதங்களும், கோயில் பற்றிய விளக்கங்களும், சாத்திரங்களின் பட்டியல்களும், விளக்கங்களும், அருளுலகப் பொருளுலகப் பழக்க வழக்கங்களும், சாட்சியங்களும் 48 வகைப்பட்ட சித்தர்களின் வரலாறுகளும், பதினெண்சித்தர்கள் பற்றிய செய்திகளும் மிக விரைவில் அச்சிடப்பட்டு மலிவு விலையில் மக்களுக்கு வழங்கப் பட்டேயாக வேண்டும்.

♦ தமிழகத்தில் பல பகுதிகளில் குருகுலங்கள், திருகுலங்கள், தருகுலங்கள் அமைக்கப் பட்டுப் பண்பாட்டுப் புரட்சிக்கு உரிய மெய்ஞ்ஞானக் கல்விப் பட்டதாரிகள் தயாரிக்கப்பட்டே ஆகவேண்டும்.

♦ கோயில் விழாக்களுக்கும், உண்டியல்களுக்கும் கொட்டிக் கொடுப்பவர்கள் நமக்குக் கொட்டிக் கொடுத்துத் துணையாகிடும் நிலைகளை உருவாக்கிடல் வேண்டும். ...

இவைதான் நமது செயல்திட்டங்கள்.

இவற்றிற்கு [1] சித்தர் கருவூரர் வாரவழிபாட்டு மன்றங்கள், [2] சித்தர் கருவூரர் அருட்கோட்டங்கள், [3] சித்தர் கருவூரர் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்கள் எனும் மும்முனைப் போர்முறையே நமது போர் வியூகம்.

//**குருதேவர் 31-5-1992இல் எழுதிய அஞ்சலில் வரும் வாசகம்**.//

# வியூகம் என்ற சொல்லின் பொருள்

ஞானம் = அறிவு

= கொள்கை அளவில், ஏட்டளவில் (Theory) இருப்பது.

விஞ்ஞானம் = விளக்கி உரைக்கப்படும் அறிவியல், செயலாக்கப்படும் அறிவியல் (Practical Knowledge)

ஊகம் = வருங்காலத்தைக் குறித்துத் திட்டம் தீட்டுதல்

= யூகம்

யூகம், அதாவது, போர் பற்றிய வருங்கால நிலைகளைக் கணித்துச் செயல்திட்டம் தீட்டுவதற்கு "யூகம்" என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

இங்கு வியூகம் = போர் குறித்து வருங்கால நிலைகளை ஊகித்து, அதாவது எண்ண அளவில் திட்டமிட்டு வெளிப்படையாகச் செயலுக்குரிய திட்டம் தீட்டுதல்.

//**குருதேவர் 31-5-1992இல் எழுதிய அஞ்சலில் வரும் வாசகம்**.//



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி






12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

“... முன்னோர் வழிபாடும், பருவபூசை வழிபாடும் மிகக் குறுகிய கால அளவில் மிகப் பெரிய பெரிய பயன்களைத் தர வேண்டுமென்றால் அந்தந்த ஊரில் உள்ள சுடுகாடு, புதைகாடு, அருளாளர்களின் சமாது முதலிய இடங்களில்தான் கொண்டாடப்பட வேண்டும் என்று இந்து வேதம் கூறுகிறது ...”

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-